## திராவிடக் கொள்கை உணர்வுடன்

# தேசிய அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற–ஈரோடு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில் இரங்கல் தீர்மானம்!

ஈரோடு, டிச.21

**கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் மாவட்டக் கழகக் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் எம்.எல்.ஏ. மறைவுக்கு இரங்கல் தெரிவித்து நிறைவேற்றப்பட்ட இரங்கல் தீர்மானத்தில், திராவிடக் கொள்கை உணர்வுடன் தேசிய அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர் மறைந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் என்று புகழாரம் சூட்டப்பட்டது.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோட்டில் நடைபெற்ற மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டத்தில், அண்மையில் உடல்நலக்குறைவால் காலமான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மறைவிற்கு ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இரங்கல் தீர்மானம் வருமாறு:-

தந்தை பெரியாரின் பேரனும் சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத்தின் புதல்வரும் நெடிய அரசியல் பாரம்பரியத்திற்கு சொந்தக்காரருமான தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர், ஒன்றிய முன்னாள் அமைச்சர், ஈரோடு கிழக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் மறைவு தமிழ்நாட்டு அரசியலுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணிக்கும் பேரிழப்பாகும்.

தேசிய இயக்கத்தில் இருந்தாலும், தந்தை பெரியார் வழியில் பகுத்தறிவுசுயமரியாதைக் கொள்கை உணர்வுமிக்கவராகவும், உள்ளத்தின் எண்ணங்களை ஒளிவுமறைவின்றி உரைக்கக்கூடியவராகவும், மதவாத அரசியலுக்கு எதிரான ஜனநாயகப் போராளியாகவும், திராவிடக் கொள்கை உணர்வுகொண்ட தேசிய அரசியல்வாதியாகவும் திகழ்ந்த ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் மறைவுக்கு ஈரோட்டில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மருத்துவக் கழிவு விவகாரம்!

# எதிலாவது அரசியல் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்!

### எடப்பாடி பழனிசாமிக்கு – அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

சென்னை,டிச.21-

“மருத்துவக்கழிவு விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி அரசியல் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்” என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த பத்தாண்டுகால அடிமை அ.தி.மு.க. ஆட்சியில் தான், கோவை, தேனி, திருநெல்வேலி, விருதுநகர் உள்ளிட்ட தமிழ்நாடு கேரளா எல்லையோர பகுதிகளில், கேரளாவில் இருந்து சட்ட விரோதமாக கழிவுகளை கொண்டுவந்து கொட்டி தமிழ்நாடே கேரளாவின் குப்பைத் தொட்டியாகி கிடந்தது. 2016 ஆம் ஆண்டு “மருத்துவக் கழிவுகள் அபாயம்: இன்னும் விழித்துக்கொள்ளாத தமிழகம்!” என்று விகடன் தனி கட்டுரையே வெளியிட்டது. 2019 ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டம்,



திருவில்லிபுத்தூர் அருகே உள்ள இனாம் கரிசல்குளம் கிராமத்தில் கேரளாவில் இருந்து குப்பைகளை கொண்டு வந்து லாரி லாரியாக கொட்டிய லாரிகளை மக்களே சிறைபிடித்த நிகழ்வு என பல்வேறு உதாரணங்களை எடுத்துக்கூற முடியும்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி அமைந்தவுடனே தமிழ்நாடு - கேரளா எல்லை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு கேரளா கழிவுகள் தமிழ்நாட்டிற்குள் நுழைவது பெருமளவு தடுக்கபட்டு வருகிறது. கழிவுகளை கொட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்பாரா விதமாக நடக்கும் ஓரிரு நிகழ்வுகள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்மந்தப்பட்ட குற்றவாளிகள் சட்டப்படி தண்டிக்கப்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டத்தின் கல்லூர்பகுதிகளில் சட்டவிரோதமாக கேரளாவில் இருந்து கழிவுகளை கொண்டு வந்து கொட்டப்படுகிறது என புகார் வந்தவுடன் விரைந்து நடவடிக்கை எடுத்ததன் பேரில், கழிவுகளை கொட்டிய சுத்தமல்லி கிராமத்தைச் சேர்ந்த மனோகரன், மாயாண்டி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**கேரள அரசுக்கு கடிதம்!**

தமிழ்நாட்டில் கேரள மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேரள மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இதுகுறித்து உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் ஒன்றிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முதலமைச்சர் உத்தரவின் பேரில் தமிழ்நாடு - கேரளா எல்லைப்பகுதிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்பதுபோல் எதிலாவது அரசியல் செய்து பேர் எடுக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் – ஆதரவற்ற குழந்தைகளுக்கு

# பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் மதிய உணவு!

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. – து.ஹரிபாஸ்கர் பங்கேற்பு!

பெரம்பலூர், டிச. 21-

பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்!

துணை முதலமைச்சர் - கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட இளைஞரணி சார்பில் துறைமங்கலம் “அன்பகம் சிறப்பு” பள்ளியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில ஆதிதிராவிட துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர் சன். சம்பத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ந.ஜெகதீஸ்வரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், ஆர். அருண், மா. பிரபாகரன், பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில்

# தமிழ்நாட்டில் புதிய 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்!

### கமுதியில் – அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார்!

கமுதி, டிச.21-

இளைஞர்கள் வேலைக்கேற்ற திறனைப் பெறவும் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கவும் தமிழ்நாட்டில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டவாறு இளைஞர்களுக்கு, பயனுள்ள வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதற்கும் தொழிற்சாலைகளுக்கு ஏற்றவாறு இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை உருவாக்கிடவும் கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 111 கோடி ரூபாய் செலவில் துவங்கிட அரசாணை வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் துவக்கி வைக்கப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அரசு தொழிற்பயிற்சி நிலையம் கமுதியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு இத்தொழிற்பயிற்சி நிலையத்தை துவக்கி வைத்தார்.

இந்த தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் பயன் பெறும் வகையில் தொழில் 4.0 தொழிற்பிரிவுகளான அட்வாண்ஸ்டு சி.என்.சி (*Advanced CNC*), மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கள் (*Mechanic Electric Vehicle*), இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீசியன் (*Industrial Robotics & Digital Manufacturing Technician*), மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் (*Manufacturing Process Control & Automation*), நவீன கால தொழிற்பிரிவுகளான விண்ட் பிளான்ட் டெக்னீசியன் (*Wind Plant Technician*), எலக்ட்ரீசியன் பவர் டிஸ்ரிபியூஷன் (*Electrician Power Distribution*), சென்டரல் ஏர் கண்டிஷன் பிளாண்ட் மெக்கானிக் (*Central Air Condition Plant Mechanic*), ஏரோநாட்டிகல் பிட்டர் (*Aeronautical Fitter*) மற்றும் ஹெல்த் சானிட்டரி இன்ஸ்பெக்டர் (*Health Sanitary Inspector*) ஆகிய தொழிற்பிரிவுகளிலும், 8 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் பயன் பெறும் வகையில் வெல்டர் (*Welder*), பிளம்பர் (*Plumber*), டிரஸ் மேக்கிங் (*Dress Making*) ஆகிய தொழிற்பிரிவுகளிலும் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இதன் மூலம் இந்த ஆண்டில் 1192 மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு பயன் பெறுவர்.

இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மற்ற இடங்களிலும் நடைபெற்ற துவக்க விழாவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம், தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய 10 இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 111 கோடி ரூபாய் செலவில், 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் கமுதியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இவ்விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். மற்ற இடங்களிலும் நடைபெற்ற துவக்க விழாவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிர் நலன்கருதி

# 17 ‘சிப்காட்’ தொழிற்பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்கள்!

### தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது!

சென்னை,டிச.21-

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிர் நலன் கருதி 17 சிப்காட் தொழிற்பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்படவுள்ளன! சிப்காட் நிறுவனம் - இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் மகளிர் பிரிவு (FICCI) இடையே குழந்தைகள் காப்பகங்கள் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம்! தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. இராஜா முன்னிலையில் கையெழுத்தானது!**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள மகளிர் முன்னேற்றம் கருதி பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, மேலும் ஒரு முக்கியத் திட்டமாக தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் முன்னேற்றத்திற்காக, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களை தொடங்கிட திட்டமிட்டுள்ளது..

இந்த குழந்தைகள் காப்பகங்கள், பணிபுரியும் பெற்றோரின், குறிப்பாகப் பெண்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், பெண் தொழிலாளர்கள் அதிகளவில் பணியாற்றக்கூடிய சூழலை உருவாக்கவும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மூலம் 17 தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட உள்ளன.

ஏற்கனவே 13 தொழிற்பூங்காக்களில் 63 குழந்தைகள் காப்பகங்கள் பல்வேறு தொழிற்சாலைகள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் பயனாக ஏறத்தாழ 1 இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி இந்த குழந்தைகள் காப்பகங்கள் வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் தொழிற்சாலைகளில் கவலையின்றிப் பணியாற்றுவதற்கான சூழல்களை உருவாக்கிட உதவும்.

இந்த 17 தொழிற் பூங்காக்களில் புதிதாக ஏற்படுத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களில் ஏறத்தாழ 3 இலட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சென்னையில் உள்ள இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்பு சார்ந்த பெண்கள் நிறுவனத்துடன் (FICCI) இணைந்து பணியாற்ற உள்ளது.

இத்திட்டத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் உருவாக்கும். சென்னையில் உள்ள இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் பெண்கள் அமைப்பு இந்த காப்பகங்களைச் செயல்படுத்தி பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளும். இந்த குழந்தைகள் காப்பகங்கள் 2017-ஆம் ஆண்டு மகப்பேறு நன்மைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படும்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப. மற்றும் இந்திய வர்த்தக மற்றும் தொழில் துறை கூட்டமைப்பினுடைய (சென்னை) பெண்கள் பிரிவின் தலைவர் முனைவர் திவ்யா அபிஷேக் ஆகியோர் இணைந்து கையெழுத்திட்டனர்.

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேச்சு!**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் இந்நிகழ்ச்சி



யில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறியதாவது:

“முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் திடமான முயற்சிகளின் காரணமாக திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புகளைத் தமிழ்நாடு தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நலன் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 43 சதவீதத்தினர் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இது இந்திய தொழிற்துறை வளர்ச்சிக்கு, தமிழ்நாட்டுப் பெண் தொழிலாளர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பைப் பறைசாற்றுகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், 17 தொழிற் பூங்காக்களில் குழந்தைகள் காப்பக வசதியை அறிமுகப்படுத்துவது உழைக்கும் பெண்களின் குறிப்பாக, தாய்மார்களின் தனிப்பட்ட பணிச் சுமையைக் குறைப்பதற்கான மற்றொரு சிறப்பான திட்டமாகும். இந்த முன்முயற்சியானது வேலைக்குச் செல்லும் பெண்களின் வேலை மற்றும் தனிப்பட்ட பொறுப்புகளைச் சமநிலைப்படுத்துவதோடு அவர்களின் பொருளாதாரம் மேம்படுவதற்கும் உதவுகிறது. பணிச்சூழலை மேம்படுத்துவதன் மூலம் பெண் தொழிலாளர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு பாலின சமத்துவத்தையும் மேம்படுத்துகிறது. இது, நமது மாநிலத்தின் உளவியல், பொருளாதார மற்றும் சமூக நலனை உயர்த்துகிறது.

**சமூகக் கட்டமைப்பு மேம்படுகிறது!**

தொழில் வளர்ச்சியிலிருந்து தொழிலாளர் நலனைப் பிரிக்க முடியாது என்ற எங்கள் நம்பிக்கையின் பிரதிபலிப்பே இந்த முயற்சியாகும். பெண்களுக்கு அதிகாரம் அளித்து, தொழில்களை வலுப்படுத்துவதுடன் சமூகக் கட்டமைப்பையும் இது மேம்படுத்துகிறது.

இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு (சென்னை) - பெண்கள் அமைப்புடனான இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், திராவிட மாடல் அரசின் “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைவரையும் உள்ளடக்கிய தொழில் சூழலை உருவாக்குவது ஒரு புதிய மைல்கல்லாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி டி.சிநேகா மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் அதிகாரிகளும், இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு- சென்னை பெண்கள் அமைப்பின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம் கால்நடை பராமரிப்புத் துறையின் தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டம் (NADCP) சார்பில் ஆறாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தை கீழ் பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம் நாடழகானந்தல் ஊராட்சியில் சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி துவக்கி வைத்தார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் இரா.ராஜேந்திரன், ஊராட்சிமன்றத் தலைவர் ஏழுமலை, சண்முகம், கிளைக் கழகச் செயலாளர்கள் செல்வம், ராஜேந்திரன், ரமேஷ், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.